# விழா மாண்பு

நீண்ட நாளாகவே எனக்கு ஓர் ஆசை. எங்கள் 'தென்னிந்தியர் சங்கம்' பிறந்து எட்டாண்டுகளாகிவிட்டன. நான் 'காரியதரிசி'யாகி வருஷம் நான்காகப் போகிறது. பெருமையோடு மார்தட்டும்படியான இசை நிகழ்ச்சி ஒன்று கூட ஏற்பாடு செய்யவில்லை. தென்னிந்திய நண்பர் கிளுகிளுக்க, வட இந்திய நண்பர் கலகலக்க, ஒரு உயர்தர கர்னாடக இசை நிகழ்ச்சி வைத்து, ஜமாய்த்துவிட வேண்டும் என்பதுதான் என் ஆசை. ஆசை என்னகத்தே மறைந்திருந்தது. மேஜைப் பந்தாட்டம்போல, பசும்புல் வெளியில் நடக்கும் பந்தாட்டம்போல் பிறரறிய வெளிப்பட முடியவில்லை. பொருளும், வசதியும் பற்ற வேண்டாமா?

போகிறபோக்கில் வருவார்கள்; 'கச்சேரி கொடுங்கள்; பாடுகிறேன். வழிச் செலவுக்குப் பணம் வேண்டும்' என்று கெஞ்சிக் கூத்தாடுவார்கள். 'குறைந்தபட்சம் நூறு ரூபாய் வசூல் பண்ணித்தர வேணும்' என்று தொடங்கி, கிடைத்த இருபது ரூபாயுடன், 'வந்தது லாபம்' என்று பயணம் தொடருவார்கள். இத்தகைய நாலாந்தரப் பாடகர்களையே ஏற்படுத்தி, என் ஜன்மாந்தரக் கடனை தீர்த்துக்கொண்டுவிட்டேன்!

'ஒரு பட்டுப் புடவை எதற்கு? எட்டு நூல் புடவை உடுத்தலாம்!' என்று சொல்லி, ஆறு நூற்சேலை வாங்கின பிறகு, திடுமென்று ஒரு பட்டாடை வாங்கும் கமலாவின் திறமை எனக்கு வர, ரொம்ப நாளாயிற்று!

'கடனே என்று ஏற்படுத்தினாற்போல இருக்கு' என்று யாரோ பேசிக்கொண்டது, அன்று என் செவியில் விழுந்து விட்டது! ஒரு உயர்தர இசை விருந்து அளிக்க வேண்டிய கடமையும், கடனும், என்னைக் 'காரியதரிசி'யாகக் கொண்ட சங்கத்திடற்கு உண்டு என்பதை அப்போது உணர்ந்தேன்.

கமலாவும் சொல்லிக்காட்டின வண்ணம்தான். "ஆமா பிரமாத சங்கம்! ஒரு தியாகராஜ விழாக்கூட கிடையாது. போகவரச் செலவு மட்டும் தந்தால் போதும். வித்வான்கள் கண்டிப்புப் பார்க்காமல் கூறுவார்கள். அதற்கே சக்தியில்லை, மாசத்திற்கு ஒரு டீ பார்ட்டி! இந்தத் தீனிப்பாடும் வெட்டிப் பேச்சும் தவிர வேறு என்ன சாதித்துவிட்டீர்கள்" என்று சதா நையாண்டி. "அவர் யாருக்கோ உத்தியோக உயர்வு என்று கூப்பிட்டு, ஆசார உபசாரம் நடத்தி ஒரு விருந்து போட்டுவிட்டீர்கள் மறுநாளே. 'அவர், 'பெர்மிட்' வாங்கிக் குடிக்கிற குடிகாரன்' என்று பக்கத்து வீட்டில் பேச்சு நடந்தது. என் காதில் விழுந்தது!" என்று ஏசிக்காட்டினாள். எங்கள் சங்கம்,

'தென்னிந்தியர்'க்கு என்று ஏற்பட்டது. ஆந்திர அங்கத்தினர் நிறைய பேர் இருக்கின்றனர். கற்கண்டு, திராக்ஷைபோல், கலந்தும், கலவாமலும் உறவாடின எங்களிடையே, முந்திரிப் பருப்புகள் (கொட்டையில்லை!) போல, சில வட இந்திய நண்பர்களும் இருந்தனர். இது எனக்குப் பெருமையாக இருக்க கமலா, "உதட்டில் சர்க்கரையுடன் பழகுகிறீர்கள்!" என உள்ளத்துக் கசப்பும், உதட்டின் காரமும் தோய்ந்த சொற்களால் சுடுவாள். ஆந்திர தேசத்தில் வளர்ந்தவள் கமலா. எந்த நாளிலேயோ (நான் அவளை மணந்த புதிதில்) அவளுடைய ஊரையும், தெலுங்கு நண்பர்களையும் கேலி செய்தேனாம். அந்தக் கேலியின் விளைவு தான் அவள் மனத்தின் கைப்பு.

இடைக்காலத்தில் ஆந்திர சகோதரர்கள் 'மதராஸ் மனதே" என்று அநியாய உரிமை கொண்டாடியபோது நான் எவ்வளவோ நிதானம் கடைப்பிடித்தேன். ஆனால் கமலாவுக்கும் ஆந்திரரின் கோஷமும், கூச்சலும் மனதிற்கு உவக்காததனால் அவளுக்கு அவர்கள்மேல் பொங்கிய ஆத்திரம் என் மேலும் சில சமயம் தெறித்தது! "நீங்கள் போட்ட மதிப்பும் வைத்த மதிப்பும் சரிதான் என்ற கர்வம்தானே?" என்று என் நிதானத்தை அவள் விமரிசனம் செய்துவிட்டாள்!

எங்கள் சங்கத்தில் அரசியலைப்பற்றி வரம்பு மீறிப் பேசாமல் பொதுவாகப் பல விஷயங்களைப் பற்றி அளவளாவுவோம். பேச்சு அதிகமிராதவண்ணம் பத்திரிகைகளும், விளையாட்டுகளும் தடை விதித்து நன்மை செய்யும். இதை கமலா அறியாள்.

அறியாமல் பேசுவதையும், ஆசையால் ஏசுவதையும் பொருட்டாகக் கருதி, இவள் சொன்னாளே என்று ரோசப்படவில்லை நான். நானாகவேதான் முடிவு செய்தேன் - 'கூடிய சீக்கிரம் ஒரு பெரிய வித்வான் வந்து பாட வேண்டும்' என்று . கமலாவின் கருத்து, மற்ற ஏனையோரின் ஆவலையும் பிரதிபலிக்கும் கருவிதான் என்பதை உணர்ந்தேன்.

"அந்த 'கலாகேந்த்ரா'வைப் பாருங்கோ! ஒரு குச்சில் நடக்கிறது. வரும்படியெல்லாம் குழந்தைகள் தருகிற பாட்டுச் சம்பளம். அது எப்பேர்ப்பட்ட ஹிந்துஸ்தானி வித்வானை வரவழைத்து ஜமாய்த்துவிட்டது!" என்று கமலா என்னுள்ளத்தில் போட்டியுணர்ச்சியைத் தூண்டப் பார்த்தாள். ஆனால் என் மனம் புகையவில்லை. தீப்பட்டதும் ஒளிரும் தீபாவளி வாணமாயிற்று!

** ** **

போனேன் 'கலாகேந்த்ரா'வுக்கு. அதன் நிர்வாகக்குழுவினருடனும், தலைவருடனும் பேசினேன். கமலாவும் நானும் ஏற்கெனவே அதன் அங்கத்தினர்தாம். ஆள்கட்டு வேணுமென்பதற்காக எங்களை அவர்கள்

சேர்த்துக் கொண்டிருந்தனர். அவர்களும் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்தாம். சந்திப்புகள் அபூர்வம்; எனினும் பரிச்சயம் அவசியத்திற்குமேல் உண்டு! இப்போது நான் அவர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு அருமையான ஏற்பாடு செய்து கொண்டுவிட்டேன்!

கர்நாடக 'ஹிந்தோளம்', ஹிந்துஸ்தானி மால்கோஸ்' இரண்டும் ஒரே ராகம் தான் என்பதைக் காட்ட வேறுபட்ட இரு பாணிகளில் பாடி, ஒற்றுமையையும் காட்டி ஒரு இசை வல்லுநர் திறமையை வெளிப்படுத்தும்போது, அவருடைய ஞானம் மட்டுமின்றி, இந்திய சங்கீதத்தின் வளமையும் வியப்பூட்டும். அநாதியான பிறப்பும், அலாதியான வளர்ச்சியும் கொண்ட நம் நாட்டுப் பாட்டு, பெருமையுடன் பக்தியும் ஊட்டும்.

இத்தகைய பெருமையையும், ஒற்றுமையையும் வேறொருவிதக் கலவையாகக் காட்டும் திட்டம்தான் உருவாயிற்று.

மூன்று நாள் இசை விழா; மூன்று நாட்களும் இனிய இசை விருந்து. மூன்று தினங்களும் முதல் தர வித்வான்களை ஏற்படுத்த முடியாவிட்டாலும் ஒரு நாள் நிச்சயமாக பெருந்தர வித்வான்; மற்ற இரண்டு நாட்களும் இளம் வித்வான்கள் - ஆனால் பெயரும் புகழும் பெற்று, 'முதல் வரிசை'க்கு வர அருகதை பெறப்போகிறவர்கள்! இந்த மூன்று நாட்களும், 'கலாகேந்த்ரா'வின் மாணவ மாணவியரின் பாட்டு, நடனம் உண்டு. அந்தப் பள்ளியின் ஆசிரியர்களும் தங்கள் திறமையைக் காட்ட ஸிதார், பிடில், எஸ்ராஜ் முதலிய கருவிகளில் நிதர்சனக் கச்சேரி அரைமணி நேரம் செய்வார்கள். இந்த ஏற்பாடு, 'கலாகேந்த்ரா' பள்ளிக்கு ஒரு விளம்பரம். அதனால் பணச் செலவில் ஒரு பகுதி அவர்கள் ஏற்கிறார்கள். அவர்களும் ஊர் சுற்றிப் பணம் திரட்டுவார்கள். போதாத குறைக்கு இட்டு நிரப்புவார்கள். இதுதான் ஒப்பந்தம். நட்புடன் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ளும் உடன்படிக்கை.

இசைவிழாவை தீபாவளி சமயத்தில் நடத்த முடிவாயிற்று. நாடு முழுதும் கோலாஹலமாகக் கொண்டாடும் தீபாவளிதான் பொருத்தம். எங்களைச் சூழ வசித்து வந்த குஜராத்தியரிடமும் இன்னும் மற்ற பேர்களிடமும் பொருள் கேட்டு அவர்களை இசை விருந்துக்குக் கூப்பிடத் தகுந்த வாய்ப்பு.

"தீபாவளி சமயத்திலேயோ? வீட்டில் சாயங்காலம் விளக்கேற்ற வேண்டாமா? பட்சணம் வேறே செய்து வைக்க வேண்டும். முக்கியமான மூன்று நாளும் சாயங்காலம் வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பியாக வேண்டுமே!" என மலைத்தாள் கமலா.

"இது ஒரு கவலையா? ஒரு தித்திப்பு, ஒரு காரம் போதும்... எட்டு தினுசு வேண்டாம். தீபாவளிக்கு விளக்கேற்றுகிற வழக்கம் தமிழ்நாட்டில் இல்லை; அந்த மாதிரி இங்கே நம் தமிழ் வீட்டில் நடந்துவிட்டுப் போகிறது!" என்று பதிலளித்துவிட்டேன்.

ஆனால் என் கவலை எனக்கு. 'எதிர்பார்த்ததற்கு மேலாக சிறப்பான இசை விழா' என்ற களிப்பு வளர்பிறையாக வளர்ந்து பூரணமாயிற்றோ இல்லையோ, உடனே தேய்பிறை வந்துவிட்டது. நான் எதிர்பார்த்த பெரியபுள்ளி வித்வான் வர இயலாது என்று தெரிந்தது. கடிதமும் தந்தியுமாகப் பறக்க விட்டேன். அப்படியும் குறி பிசகியது. பிறகு, ரேடியோவில் முழுநேரக் கச்சேரி கொடுக்கும் வேறொரு பெரிய இளம் வித்வானை வரவழைக்க முயற்சி செய்தேன். முயற்சி பலித்தது.

யோசனையில் மூழ்கியிருந்த என்னைக் கமலா என்ன கேள்வி கேட்டாளோ தெரியவில்லை. "பதினைந்து நாளில் என்ன குளிர் வரப்போகிறது? பேஷாயிருக்கும்!" என்றேன். கடகடவெனச் சிரித்தாள் அவள். "பேஷ்! பாட்டுக் கேட்கக் காது ரொம்பத் தயாராய் ஜோராயிருக்கே!" என்று நகைத்துவிட்டு விழா ஏற்பாட்டின் விவரம் கேட்டாள். வாசலில் காற்றாட உட்கார்ந்திருந்த குளிர்ந்த வேளையல்லவா? நானும் சொன்னேன். சுமார் அறுநூறு ரூபாய் வசூலாகிவிடும் என்று நான் சொன்னபோது ஆச்சரியப்பட்டாள் கமலா. தமிழ்க் குடும்பங்கள் நாற்பது கூட இல்லாத ஓர் ஊரில் கர்நாடக சங்கீதக் கச்சேரிக்கு இத்தனை வசூலாகும் என்று எளிதில் நம்ப முடியாதுதான்.

"போதுமோ, மூன்று நாளுக்கும்?" என்று கேட்டாள். பெரிய வித்வான் விசாகப்பட்டினம் வரை வேறொரு சபாவின் செலவில் அங்கு கச்சேரி செய்ய வருகிறார். அதனால் அங்கிருந்து இங்கு வந்துபோகச் செலவும், அவருடைய கட்டணத்தில் பாதியும் ஏற்க இசைந்துவிட்டார் என்பதைச் சொன்னேன். இரண்டாம் நாள், தீபாவளித் தினம் பெரியவரின் கச்சேரி. அதற்கு முன்தினம், கல்கத்தாவிலிருந்து ஒரு இளம் பாடகர் வருகிறார். தீபாவளிக்கு மறுநாள் ஒரு பிடில் தனிக் கச்சேரி. விஜய நகரம் இசைக் கல்லூரியில் பயிற்சி பெற்று உயர்ந்த முறையில் பிடில் வாசிக்கும் வித்வான்.

"ஓ, தெலுங்கு வித்வானும் உண்டா? எல்லோரையும் தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப் பணம் போதாது அல்லவா?" என்று இடக்காகக் கேட்டாள் கமலா.

"ஏன், கல்கத்தாவிலிருந்து வருகிறாரே பாடகர், அவரே பிடில் ஜோராக வாசிப்பாராம், அவரையே ஒருநாள் வாசிக்கச் சொல்லக் கூடாதா?

இன்னொருவரை வரவழைக்கணுமென்று தான் செலவைப் பார்க்கவில்லை," என்று தெரிவித்தேன்.

"அதுவும் ஒரு நாள் இருக்கட்டுமே" என்றாள் கமலா. "தீபாவளித் தினம் பாடுகிற பெரிய வித்வான் பக்கவாத்தியங்களுடன் வரப்போகிறதில்லை. அவருக்கு வாசிப்பார் என்று நினைக்கிறேன்; முதல் நாள் மிருதங்கமேதான் மற்ற நாட்களிலும்," என்று நான் சொல்லிக் கொண்டிருக்கையிலே வாசலில் ஒரு பையன் சைகிளில் வந்து இறங்கி வணங்கினான். பை நிறையக் காகிதக் கட்டுகள் கொணர்ந்திருந்தான்.

"பார், இதெல்லாம், நோட்டீஸ்; அழைப்பிதழ்கள்" என்று ஒரு கட்டுப் பிரித்தேன்.

"இத்தனை நாள் கிடக்கும்போதே . . ." என்று ஒரு இழுப்பு இழுத்துவிட்டுச் சிரித்துக்கொண்டு கமலா எழுந்து போனாள்! தீபாவளிக்கு இரண்டு மாதமிருக்கும் போதே புடவை யோசனையை எழுப்பிய அவள் நிதானத்தைச் சொல்லிக் காட்டக்கூட எனக்கும் உடனே தோன்றவில்லை. பட்டாசுக் கட்டுகளைச் சுமந்து செல்லும் சிறுவனைப் போல அந்தக் காகிதக் கட்டுகளை ஏந்திக்கொண்டு உள்ளே வந்தேன்.

"அப்போ இசைவிழா நிச்சயந்தான்?" என்று நமுட்டாக கமலா சீண்டினபொழுது, 'இப்பத்தான் இவளுக்கு நம்பிக்கை வந்ததா?' என்று வருத்தமும் வந்தது!

** ** **

“வருக! வருக! தென்னிந்தியர் சங்கமும் 'கலாகேந்த்ரா'வும் சேர்ந்து நடத்தும் இசைவிழா! வருக! நல்வரவாகுக!" என்று அழைப்பு முழங்கிற்று. உள்ளூர்ச் செய்திப் பத்திரிகையில் அறிக்கை வெளியாயிற்று.

அழைப்பும் அறிக்கையும் விடுத்து, இசை விழாவைப் பற்றி ஊராருக்கு ஆவலைத் தூண்டிவிட்டபின், பணம் திரட்டப் புறப்பட்டோம். என் அண்டை அயல் வீடுகளில் வசித்து வந்த குஜராத்தியர்களை அணுகி, நம்பிக்கையுடன் ஒத்துழைப்பு நாடினேன். அவர்களோ "மூன்று நாளும் எங்களுக்கு முக்கியம். வரவே முடியாதே! எங்கள் குஜராத்திப் பள்ளியிலேகூட ஒரு நாடகம் போட ஏற்பாடாகிறதே!" என்றனர். ஒருநாள்கூட வராவிட்டால் எப்படிப் பணம் வசூலிக்க நா எழும்பும்? மனந்தளராமல் கூடிய மட்டும் என் பங்கு அலைச்சலை நழுவ விடாமல் ஒரு தொகை திரட்டினேன். கட்டணம் வைக்காமல் நன்கொடையாகப் பொருள் சேர்க்கத்தான் ஏற்பாடு.

தீபாவளிக்கு இரண்டு நாள் முன்பே அக்கம்பக்கம் குஜராத்திக்காரர்கள், விடியற்காலையிலேயே அகல் விளக்குகள் ஏற்றிவைத்துக் கொஞ்சம்

பட்டாசும் சுட்டனர். "சாயங்காலம்தான் ஏற்ற முடியாது - நாம் வெளியில் போக வேண்டும். இப்போதாவது ஏற்றுகிறேன்" என்று கமலா பரபரப்புடன் அகல்களைத் தேடி எடுத்தாள். போதுமான பஞ்சுத் திரிகள் இல்லை. 'விடிந்தே போய்விட்டது, அகல் எடுப்பதற்குள்!" என்று அலுத்துப்போய் அகல்களை உள்ளே வைத்தாள்!

அன்று மாலையில் விழாத் துவக்கம். கல்கத்தாவினின்று வந்த நாராயண பாகவதர் வெகு அழகாகப் பாடினார். இன்னும் பாடவேண்டும் என்று அவரும் நினைத்திருப்பார்; ஆனால் நேரம்தான் போதவில்லை. இரண்டரை மணி நேரம் அவர் பாடினாலும், நேரம் போனது தெரியவில்லை; மணி பத்து ஆகிவிட்டது. ஐந்தரை மணிக்கே நிகழ்ச்சி ஆரம்பமாகியிருந்தும், தலைவரின் சொற்பொழிவு, 'கலாகேந்த்ரா'வின் சார்பாக அதன் நிர்வாகஸ்தரின் பிரசங்கம் முதலிய 'பேச்சு'களும் 'கலாகேந்த்ரா' மாணவர்களின் 'கற்றுக்குட்டி'த்தனமான ஆடல் பாடல்களும் தேவைக்கு மீறியிருந்தன. இந்த கல்லிபில்லிகள் முடிவதற்குள்ளாகவே தென்னிந்திய ரசிகர்களுக்குச் சப்பிட்டுப் போய்விட்டது. இறுதியில் நாராயண பாகவதர் கச்சேரி ஜம்மென்று ஆரம்பமானதும், 'இதை முதலில் வைத்திருக்க வேண்டும்' என்று தான் எனக்கே தோன்றியது. ஆனால், வேணுமென்றேதானே நிகழ்ச்சிநிரலை இப்படிப் போட்டது? அவரவர் குழந்தைகளின் ஆடலும் பாடலும் முடிந்த பிறகு வட இந்திய ரசிகர்கள் சில பேர் எழுந்து போய்விட்டார்கள். ஆனால் மீதிப்பேர் நாத வெள்ளத்தில் கட்டுண்டு கேட்டுவிட்டே போனார்கள்.

வீடு திரும்பும் வழியில் கமலா, 'கலாகேந்த்ரா நிகழ்ச்சிகள் விசேஷமாயில்லை. சலிப்புத் தந்தது" என்றாள். விட்டுக்கொடுக்காமல் நான், "பள்ளிக்கு விளம்பரம்; அதனால்தான் அவர்களும் பொறுப்புப் பங்கு ஏற்கின்றனர்" என நினைப்பூட்டினேன். "ஆமாம்... ஆனால் பாகவதரின் பாட்டு இன்னும் ஒரு மணி நேரம் இருந்திருக்க வேண்டும். உயர்தரமான கச்சேரி. ஜனரஞ்சகமான ராகங்களும், கீர்த்தனைகளும், அஷ்டபதிகளும் பாடினார்" என்று புகழ்ந்து கொண்டு வந்தாள்.

வீடு மீண்டபின் கங்காஸ்நான ஏற்பாடு செய்துவிட்டுப்படுத்தாள். தாமதமாகப் படுத்ததன் பலன், நாங்கள் கங்காஸ்நானம் செய்யப்போகும் சமயம், கங்கா ஸ்நானம் விசாரிக்க சில நண்பர்கள் வந்துவிட்டனர்

"இன்றைக்காவது காலையில் சில அகல்கள் ஏற்ற வேணுமென்றிருந்தேன்" என்று பெருமூச்சு விட்டபடி எதிர்வீட்டில் அணையும் நிலையிலிருந்த தீபச்சுடர்களை வெறிக்கப் பார்த்தாள் கமலா. வீட்டில் பெரியவர்கள் இருந்தால் 'ஸ்தானத்திற்கு' டாணென்று எழுப்புவார்கள். சிறு குழந்தைகளிருந்தால் பட்டாசு ஓசையைக் கேட்டுத்

துள்ளி எழுவார்கள். எங்களகத்தில் நாங்கள் இரண்டே பேர். குழந்தைகளும் நாங்கள்; பெரியவர்களும் நாங்கள்.

"நாங்களும்தானே பாட்டுக் கச்சேரி கேட்க வந்திருந்தோம்?" என்று கேட்காத குறையாக நண்பர்கள் பேசிச் சென்ற பிறகு கமலா தன் குரலில் ஒலியெழ ஒரு சொல் வெடித்தாள். "அவர்களுக்கு மனதில் தீபாவளி நினைப்பு மேலிட்டுப் போயிருக்கும். நமக்கு, பதினைந்து நாளாகவே தீபாவளி நினைவைவிட பாட்டுக் கச்சேரியின் நினைவேதான்!" என்று காரணங் கூறினாள். ஆனால் சூரிய வெளிச்சத்தில் ஏற்றிய மத்தாப்புப் போல முகத்தில் ஒளி மங்கியே இருந்தது.

** ** **

மாலையில் பெருந்தர வித்வானின் இசை நிகழ்ச்சி என்ற உவகை எங்கள் உள்ளத்தில் ஒளிர்ந்தது. ஆத்ம திருப்திக்காகக் காலையில் உடுத்தின புத்தாடைகளை, மாலையில் பிறர் திருஷ்டிக்காக உடுத்தினோம். கமலா எதிர்வீட்டு வேலைக்காரனைக் கூப்பிட்டாள். ஒரு கட்டு மெழுகுவர்த்திகளைத் தந்தாள். "எல்லோர் வீடுகளிலும் விளக்கேற்றும் போது எங்கள் வீட்டு வாசலிலும் ஏற்றி வையப்பா" என்று சொல்லிவிட்டு நிறை மனதுடன் என்னை முந்திக் கொண்டு புறப்பட்டாள்.

அபூர்வமாக எங்களூர் வந்திருக்கும் உயர் பெரிய வித்வான் அன்றோ? அவருடைய குரலிசைக்கு 'கலாகேந்த்ரா'க் காரரும் உயர்ந்த மதிப்புக் கொடுத்து, தங்கள் மாணவ மாணவியரின் திறமையைக் காட்டும் ஆர்வத்தை அடக்கிக்கொண்டனர். இரண்டு மூன்று சொற்ப நிகழ்ச்சிகளை முதலில் நடத்திவிட்டு, மீதி நேரத்தை வித்வானுக்கு ஒதுக்கினர்.

"கச்சேரி நிகழ்ச்சியில் ஒரு மாறுதல் புகுந்திருக்கிறது," என்பதை அறிவித்தோம். "நேற்று குரலிசை பாடிய நாராயண பாகவதர் இன்று பிடில் பக்கவாத்தியம் வாசிக்கவில்லை. நாளைக்கு பிடில் தனிக் கச்சேரி செய்யப் போகிற வித்வான் சூர்யராவ் இன்று பிடில் பக்கவாத்தியம் வாசிப்பார்," என்பதுதான் மாறுதல்.

பாடகரின் ஒப்பற்ற குரல் வளமும், ஞானச் சிறப்பும், மேதையும் சபையோரை மெய்மறக்கச் செய்தது. ஹாஹாகாரமும் மோனமும் மாறி மாறி எழும்பியடங்கி, அலையலையாக வந்த நாத வெள்ளத்திற்குத் தலை வணங்கின. ஆனால் பிடில் பக்கவாத்தியம் எடுபடவில்லை என்றுதான் தமிழ் நெஞ்சு ஒவ்வொன்றும் உணர்ந்திருக்க வேண்டும்!

வீடு திரும்பும் வழியில் கமலாவும் இதையே குறிப்பிட்டாள். "ஆமாம், பிடில் போதாது. தனிக் கச்சேரிகள் செய்தே பழக்கமானவர்; பக்கவாத்தியம் பழகவில்லை" என்று கூறினேன்.

"பின்னே ஏன் ஏற்பாடு செய்தீர்கள்? மெனக்கெட மாற்றினீர்களே!" என்று கமலா கேட்டாள்.

"மாற்றியிருக்க வேண்டாம். ஆனால் சில ஆந்திர அங்கத்தினருக்கு மாற்றணுமென்று தோன்றிவிட்டது. சூர்யா ராவ் ஒருநாள் முன்னதாக வந்துவிட்டார். அவரைப் பக்கவாத்தியமும் வாசிக்கச் சொல்லி அதற்கும் பணங் கொடுக்கணுமென்பது அவர்கள் எண்ணம்" என்று தெரிவித்தேன்.

"அப்படியா? தமிழ் வித்வானுக்குத் தகுந்தாற்போல தெலுங்கு பிடில்காரர் வாசிக்க முடியுமா என்று கேட்காத குறையாக நீங்கள்தான் ஏற்பாட்டை மாற்றினீர்களோ என பார்த்தேன்" என்று கமலா சிரிக்காமலே சொன்னாள்.

அந்தவிதமான சவால், பரீட்சை, ஆந்திரர்களே தாம் கொடுத்துத் தங்கள் பெயரைக் கெடுத்துக்கொண்ட லட்சணத்தை நான் சொல்லிக்காட்டிடவில்லை மீண்டும், அவளுக்கே தெரியவில்லையா? வாய்ப்பாட்டுப் போலவே வாசிக்க முடியாது என்பது கிடையாது; பாட்டுக்கு மிஞ்சின வாசிப்பு வாசிக்க வேண்டும் என்ற துடிப்பு; அல்லது 'பாடகரை நாம் அனுசரிப்பதாவது?' என்ற வீறாப்பு, வீண் பெருமை; 'கணவனை மீறி ஒரு காரியம் செய்வதால் நான் தர்மபத்தினியாகமாட்டேனோ?' என்று ஒரு பெண் அடிக்கடி நினைத்து மனசைக் கெடுத்துக் கொள்வதுபோலத்தான் இந்தப் போலிப் பெருமை ஆந்திர தேசத்து பிடில் வித்வானுக்கு! நிறைய வாசித்துப் பிளந்து விட்டாரா என்றால் அப்படியுமில்லை. 'நீ எப்படி வேணுமானால் பாடிக்கொண்டு போயேன்; எனக்கென்ன?" என்று அலட்சிய பாவத்தில் உறைந்து போய்விட்டார் பக்க வாத்தியக்காரர்!

வீட்டிற்கு வந்து பார்த்தபோது, மெழுகுவர்த்திகள் பெரும்பாகம் எரியாமல் குத்திட்டு நின்றிருந்தன. "அடப்பாவமே! வாசலில் இருள் கவிந்து கிடந்திருக்கும்!" என்று கமலா வருந்தினாள். "ஏற்றினதும் கடமை தீர்ந்தது என்றிருந்திருப்பான்" என்று சொன்னேன்.

'பிடிலைக் கையில் பிடித்ததும் கடமை முடிந்ததாக எண்ணியிருப்பார் உன் தெலுங்கு தேசத்து வித்வான்,' என்று நான் மனதில்தான் நினைத்துக் கொண்டேன்!

** ** **

மூன்றாம் நாள் மாலையில், முதல் நாள் போலவே 'கலாகேந்த்ரா' நிகழ்ச்சிகள் பல புகுந்திருந்தன. 'ஒரு குருவி ஒரு நெல் கொண்டு வந்தது; இரண்டு குருவி இரண்டு நெல் கொண்டு வந்தது' என்று இழுபடும் குட்டிக் கதை போல்தான்; ஒரு பெண் ஒரு மீரா பஜன்; இன்னொரு பெண் ஒரு ஸூர்தாஸ் பஜன்; மற்றொரு பெண் ஒரு கபீர்தாஸ் பஜன். இப்படிப் பாடுகிற பெண்களுக்கு நீடித்த பயிற்சியோ, அறிவு வளர்ச்சியோ

கொஞ்சமும் போதாது. சிறுமிகள்; கொஞ்ச காலமாகத்தான் வாயைத் திறந்து பழக்கம்! கிராமிய நடனம், சந்தால் நடனம், கதக் நடனம் எல்லாம் ஏறக்குறைய ஒரே போக்கு - உடைகளில் தான் குறிப்பிடத்தக்க மாறுதல். இத்தனைக்கும் 'கலாகேந்த்ரா' பள்ளியின் ஆசிரியர்கள் திறமையான கலைஞர்கள். அவர்களுடைய தனித் தனிக் குட்டிக் கச்சேரிகளே அதைச் சொல்லும். இறுதியில் சூர்ய ராவ் பிடில் தனிக் கச்சேரி. இதிலே சோடை போகாது என்பது தெரியும் எனக்கு. ரொம்ப நன்றாகவே வாசித்தார். ஆனால், மேல் சஞ்சார ஸ்தாயிகளில் இடறிவிட்டார். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பவராக, பிடித்த பிடி விடாமல் தீர்த்துக்கட்டிவிட்டார். இந்த ஒரு குறை தவிர வேறு அப்பழுக்குச் சொல்ல முடியாது.

இல்லந் திரும்பும் வழியில் கமலா ரொம்ப நேரம் எதுவும் பேசவில்லை. 'எல்லா விஷயத்திலுமா மதிப்பைப் பறிக்க வேண்டும்?" என்று என்மேல் கோபமோ? அல்லது 'ஏன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளாமல் பறிகொடுக்க வேண்டும்?' என்று ஆந்திரர்கள் மேல்தான் தாபமோ?

"ஒருவழியாய் முடிந்தது விழா" என்று நான் சொன்னபொழுதுதான், "என்னவோ விழா. ஒவ்வொரு நாளும் ஒரு குறை," என்றாள்.

"அவை தவிர்க்க முடியாதவை" என்றேன்.

"எது தவிர்க்க முடியாதது? 'கலாகேந்த்ரா'வைச் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டாம். அனாவசிய நிகழ்ச்சிகள்," என்றாள் கமலா.

"அவர்கள் சேர்ந்ததனால் பணம் கூடி வந்தது. பிடில்காரருக்கு இன்னும் ஐம்பது ரூபாய் வேணுமாம். முடியாதென்று சொல்லிவிட்டேன்."

"ஏன்? தெலுங்கருக்குத் தரத்தான் பணம் பற்றாதோ?"

"உளறாதே! வசூலானதே நானூறுதான். 'கலாகேந்த்ரா' சொந்தப் பணம் நூறுக்குமேல் போட்டுத் தருகிறது".

"ஏனிப்படி?"

"ஹரிஹரன் இருநூறு ரூபாய் வசூல் பண்ணிவிடுவேன் என்று சொல்லி நம்ப வைத்தார். வாயால் பேசிவிட்டு, கிட்டிமுட்டி வந்ததும் கையை விரித்துவிட்டார்."

"அது யார் ஹரிஹரன்?"

"நாராயண பாகவதரை கல்கத்தாவிலிருந்து அழைத்துவர அவர்தான் பொறுப்பேற்றார். இந்த ஊரில் நல்ல செல்வாக்கு, வியாபாரிகளிடம்.... அவர் பேச்சைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை..." என்று இழுத்தேன்.

"அப்படியானால் கஷ்டம்தான். பிடில் எவ்வளவோ நன்றாயிருக்க வேண்டியது.. மேல் சஞ்சாரத்தில் அபஸ்வரங்களைக் கொட்டிக் குட்டிச்சுவராக்கிவிட்டார். போதும் போதும், கொடுத்த சன்மானம்! புது இடத்திற்கு வந்த வாய்ப்பாட்டுக்காரர்களுக்கு ஊரும், நீரும் ஒத்துக்கொள்ளாமல் தொண்டை கெட்டால், குறைகூற நமக்கு வாய் கிடையாது. பிடில்காரர் வீணாகக் கெடுத்துக் கொண்டார்." என்று கமலா அங்கலாய்த்தாள்.

** ** **

ஓய்ச்சலும் அமைதியுமாக உறங்கியதனால், மறுநாள் காலை விழித்தெழும் போது நல்ல வெளிச்சம். கதிரொளி படர்ந்துவிட்டது. வாசலில் குஜராத்தியர் ஆண், பெண், பாலர் அடங்க வந்த வண்ணம் போன வண்ணம் புத்துடை அணிந்து "ராம் ராம்" என்று கைகூப்பி, கரம்பற்றி பரஸ்பரம் வணக்கமும் வாழ்த்தும் செலுத்திக் கொண்டனர். வாசலுக்குப் போய் கோலமிடவும் கமலா கூசினாள். தன் நித்திரையை நினைத்து வெட்கம்.

"எங்களுக்கு தீபாவளி ரொம்ப முக்கியம்" என்று சொன்ன குஜராத்தியரிடம் கமலா "எங்களுக்குத்தான்!" என்று கூறியிருந்தாள் "பாழ்பட்டுக் கிடந்தது வீடு, சந்தி வேளையிலே; பண்டிகையாம்!" என்று அவர்கள் கடந்த இரண்டு மூன்று நாளும் நினைத்திருப்பார்களோ?

"போயும் போயும் இந்த தீபாவளி சமயத்தில் கச்சேரிகளை வைத்திருக்க வேண்டாம். எனக்கு முதலிலேயே மலைப்புத்தானே! தீபாவளிக்கு ஊரோடு ஒத்து விளக்கேற்றவில்லை. நம்மூர் மாதிரி சுருக்கிலே கங்கா ஸ்நானமும் ஆகவில்லை. என்னவோ விழாவும் பண்டிகையும் . . . ." என்று கமலா மொண மொணத்தாள்.

நான் பேசவில்லை; அனாவசியமாய்ப் பேசுவானேன்?

பிற்பகலில் எனக்கொரு அழைப்பு வந்தது, 'போன்' மூலம். நாராயண பாகவதர் ஹரிஹரனின் வீட்டில் பிடில் வாசிக்கிறாராம். வாய்ப்பாட்டும் பாடுகிறாராம். என்னையும் கமலாவையும் வரச் சொல்லும்படி ஹரிஹரன் கூறினதாக ஒரு நண்பர் பேசினார்.

"போகலாமா?" என்று கேட்டேன்.

"நான் வரவில்லை. மூன்று நாளும் உட்கார்ந்து உட்கார்ந்து இடுப்புப் பிடித்துக் கொண்டுவிட்டது. ரிக்ஷாவில் ஊர்கோலம் நாலு மைல் வர என்னால் ஆகாது" என்றாள் கமலா.

எனக்கும் அசதி; போகவில்லை.

டெலிபோன் மூலம் என்னை அழைத்திருந்த நண்பரை இரண்டு நாள் கழித்து சந்தித்தோம், சினிமாக் கொட்டகை வாசலில், "ஏன் வரவில்லை? ரொம்ப நன்றாயிருந்தது கச்சேரி. சுமாரான பெரிய ஹாலில் நடந்தது. 'மைக்' இல்லாமலேயே சோபித்தது. நீங்கள் வந்திருக்க வேண்டும்" என்றார் அவர்.

"என்ன கீர்த்தனைகள் பாடினார்?" என்று கமலா கேட்டாள். போகத் தவறின வருத்தத்தோடு.

"வாய்ப்பாட்டில் மூன்றே உருப்படி; அதில் ஒன்று 'சக்கனிராஜ மார்க்கமு'. அதற்கே அந்த இருநூறு ரூபாயும் தகும்! . . ."

என்னை மீறிய வியப்புடன், "இரு நூறா?" என்று கேட்டேன்.

"ஹரிஹரனுக்கென்ன சார்? மார்வாரிகளிடம் அபார செல்வாக்கு! அவர்களும் வந்து தலையாட்டிவிட்டுப் போனார்கள்!" என்று நண்பர் முறுவலித்தார். மார்வாரிகள் கர்நாடக இசையை அனுபவித்த காட்சியை நினைத்துக்கொண்டார் போலிருக்கிறது.

வீடு மீளும் வழியில் கமலா சினிமா விமரிசனத்தில் புகாமல் அந்தப் பேச்சையே எடுத்தாள்.

"கையை விரித்துவிட்டார் என்று சொன்னீர்களே, அந்த ஹரிஹரனா? கை நிறைய அள்ளி கொடுக்கிருக்கிறாரே!" என்றாள்.

"நாராயண பாகவதர் தங்கள் பாலக்காட்டுக்காரர் என்ற எண்ணம் போலிருக்கு!" என்று முணுமுணுத்தேன்.

"போலிருக்கு என்ன? அதேதான் இந்த வசூலை முதலில் தந்திருந்தால் எல்லோருக்கும் தாராளமாகவே தந்திருப்பீர்கள். பாவம். 'கலாகேந்த்ரா' கைவிட்டுப் பணங்கொடுத்தது. நீங்களும் உடந்தை என்றுதானே நினைக்கும், இந்த வெட்கக்கேடு தெரிந்தால்?" என்று கமலா என் வேதனையைக் கிளப்பியே பேசினாள்.

"அதற்காக நான் பயப்படவில்லை; உண்மையைச் சொன்னால் போகிறது சமயம் வாய்த்தால்" என்றுரைத்தேன்.

"நாம் ஒற்றுமை என்றாலும் வேற்றுமைதான் வளருகிறது! நீங்கள் தெலுங்கர்களை வேறு என்று கருதினால் ஹரிஹரனோ, தான் பாலக்காட்டுத் தமிழர் என்று உங்களை ஒதுக்கிவிட்டார். விழாவுக்கு வசூல் பண்ணித் தருவதாக சொல்லிவிட்டார்; அந்த சொல்லைக் காப்பாற்றத் தோன்றவில்லை. உள்ளூர எல்லோருக்கும் அவரவர் பாஷாபிமானம் தேசாபிமானம். ஆனால் இப்படி இருக்கக் கூடாது அல்பத்தனம்; தென்னிந்தியர் சங்கம் என்று நடத்துகிற உங்களுக்குள்ளேயே எத்தனை

பாகுபாடுகள். உங்கள் அழகான ஒற்றுமையைக் காட்ட 'கலாகேந்த்ரா'வையும் சேர்த்துக் கொண்டுவிட்டீர்கள்!" என்று கமலா பொசிந்து கொட்டினாள்.

"நடந்ததோ இல்லையோ இசைவிழா? அதுதான் முக்கியம். அதுதான் பெருமை. நாலு பேர் கூடினால் பலவிதமும்தான் இருக்கும். ஆனால் சாதனைதான் குறிக்கோள்" என்று முழக்கினேன் நான்.

வேற்றுமைகளினால் குலைந்து விழாத ஒற்றுமைதான் இந்திய நாட்டின் பெருமை. அதுபோலவேதான் இந்த இசை விழாவின் உயர்வு. விழா(த்) மாண்பு.

உள்ளூர்ப் பத்திரிகையிலே வெளியான விமரிசனம் இதுதான்:-

"நமது பாரதத்தின் பல பகுதியினரும் பலவிதமாகக் கொண்டாடும் தேசீய விழா தீபாவளி. இந்தப் பண்டிகையின் சிறப்புக்கு ஒத்த முறையில் நம்மூரில் ஒரு இசைவிழா நடந்தது. இந்துஸ்தானி சங்கீதம் கற்பிக்கும் 'கலாகேந்த்ரா'வும் தென்னிந்தியர் சங்கமும் ஒத்துழைத்து நடத்தின இந்த விழாவில், தென்னாட்டைச் சேர்ந்த இசை வல்லுநரும் நம்மூர்க் குழந்தைகளும் பங்குகொண்ட முறை பாராட்டத்தக்கது. கலாசார வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் புறக்கணித்து, ஒத்த ஆர்வமுடன், பரஸ்பர நன்மதிப்புடன் கலந்து உறவாட கலைதான் சீரிய பிணைப்பு என்பதற்கு ஒரு சான்று." சுருதி சுத்தமாக அமைந்த இந்த ஞானப் பண் கமலாவுக்கு உவகையூட்டிவிட்டது.

"நீங்கள் "காரியவாதி" என்று சிரித்தாள்.

அப்புறம் ஒரு நாள் கமலாவும் எதிர்வீட்டுப் மணிபாயும் பேசும்போது கவனித்தேன்.

"ஏன் விளக்கு ஏற்றவில்லை. கமலா?"

"சௌகரியப்படவில்லை. மூன்று நாளும் பாட்டுக் கச்சேரி கேட்கப் போய்விட்டோம்."

"ஏற்றாதது தப்பு இல்லையா?"

"எங்களில் தீபாலங்காரம் வழக்கமில்லை...."

"அதுதான் நீ ஏற்றவில்லை! ஏன் ஊரோடு ஒத்து ஏற்றினால் தப்பா? உன் வீட்டில் இருண்டு கிடந்ததே!"

கமலாவுக்குப் பொறுக்கவில்லை!

"நாங்கள் கார்த்திகைக்கு ஏற்றும்போது நீங்கள் ஏற்றுவீர்களா?"

மணிபாய் "மாட்டோம்" என்று சொல்லிவிட்டாள், நிர்த்தாட்சண்ணியமாக.உள்ளே வந்த கமலா, "மனதில் என்னதான் ஒற்றுமையாக நினைத்தாலும் தர்க்கம் போல பேசும்படியாகிவிடுகிறது" என்று வருத்தமுடன் சொன்னாள் என்னிடம்.

"மனதில் நினைப்பதுதான் முக்கியம்; பார்க்கப் போனால் உன்னைவிட நானே - ஏன், பெண்களைவிட நாங்களே, மனதாலும் பேச்சாலுங்கூட ஒற்றுமைதான்!" என்று சொல்லி நான் சந்தோஷமாகச் சிரித்தேன்.

**********

(சுதேசமித்திரன், டிசம்பர் 5, 1954)